**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.79/2020 PW .3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வைரவன் | தந்தை/கணவர் பெயர்: ராமசந்திரன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of19.03.2025

---

**(எதிரிகள் ஆஜர்)**

**19.03.2025 முதல் விசாரணை:**

1. நான் தெக்கூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னுடைய மகன் பெயர் ராஜா. அவர் தற்போது சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறார். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தான் இந்தியாவிற்கு வருவார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**
**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2. என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் எதிரிகளுக்கு சாதகமாக பார்வை மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்று பொய் சாட்சியம் அளிககிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பமும், அழைப்பாணையில் உள்ள என்னுடைய கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் என்னுடைய கையொப்பம் இதில் இல்லை அதனால் எனக்கு தெரியாது. இரண்டு கையொப்பங்களும் ஒரே மாதிரியாக உள்ளதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 09.01.2019 ம் தேதி இரவு 9.30 மணிக்கு அ.சா.1 சொர்ணாம்பிகா கொடுத்த புகார் வழக்கில் நெற்குப்பை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.1 வீட்டின் முன்பு சம்பவஇடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வைமகஜரில் என்னிடமும், சாட்சி ராஜா என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு

நெருங்கிய பழக்கமானவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் கேட்டு கொண்டதற்காக பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**